முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.04.2021, வியாழக்கிழமை

1. அறமாக மக்களை நோக்கி
ஆன்மீகம் வளர்க்கும் அண்ணலே
வரமாக மக்களுக்கு அருளி
வாழவைக்கும் அரங்கமகா வள்ளலே
2. வள்ளலே உன்பெருமை கூறி
வழங்குவேன் யோகபிரசன்ன ஆசி
வல்லமைபட பிலவ தகரின் திங்கள்
வளமான உபயதிகதி குருவாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 2ம் நாள், 15.04.2021 வியாழக்கிழமை)
3. வாரமதில் இளையான்குடி நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமில்லா ஞானவான்கள் தன்னை
சுத்த நெறி கொண்டு படைக்கவே
4. படைக்கவே பிரணவக்குடில் படைத்து
பரோபகார சிந்தை வளர
தடையின்றி தருமம் இட்டுமே
தவபலம் காட்டும் அரங்கன்
5. அரங்கன் திருவடி பற்றி வர
அருளமுது உண்டு வருக
வரங்கள் பல பெறுவதுடன்
வருபவர்க்கு துன்ப கதி விலகி
6. விலகி ருண ரோகமில்லா
வினை இல்லா வாழ்வாகி
கலகம் துன்பம் இல்லா
கலியில் மேல்நிலை அடைந்து
7. அடைந்து உயர்குணம் நிறைந்து
அன்புடன் பிற உயிர்க்கு அருளும்
தடையிலா தரும பலம் கூடி
தயவான மக்களாக மாறுவர்
8. மாறுவர் ஞானிகள் தேடும்
மகத்துவம் கொண்டவர்களாகி
ஆறுமுகனார் வேண்டலின் வழி
அனைவரும் வணங்கி வணங்கி
9. வணங்கியே ஞானிகள் ஆவர்
வையகம் மாற்றும் சக்தியாகி
வணங்கும்படி கலியுகத்தில்
வாழும் ஞானிகள் வள்ளல்கள் ஆவர்

10. ஆவரே அரங்க ஞானியரின்
அற்புதமான வழிகாட்டலால்
புவனம் மாற்றும் சக்திமிக்க
புண்ணிய பலம் பெற்றவர்களாகி

11. ஆகியே உயருவர் கலியில்
ஆறுமுகன் ஆசி பெற்றவர்களாகி
அகிலத்தை மாற்றம் செய்வர்
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—